# 24 தன்கதைகள் சொல்லல்

## இலக்கு

*செம்மையான கல்விச் சூழலில் தன்கதைகளைச் சொல்லுதலால், தம்முடைய பட்டறிவுகளை எடுத்துரைக்கவும் தங்கள் உணர்வுகளையும் கூட வெளிப்படுத்தவும் தங்கள் முதல்மொழியைப் பயன்படுத்தவும் மாணவர்கள் கற்றுக்கொள்கின்றனர். அதே நேரம், அவர்கள் தம்முடைய தொடர்பாடற் பொருத்தமுறு தகைமைகளான கேட்டறியும் வலு, பின்தொடர் வினாக்கள், ஒருவர்க்கொருவர் பகிரும் குறிப்புகள் ஆகியனவற்றைக் கூர்மைப்படுத்திக்கொள்கின்றனர். நிறைவாக, குறைவானதல்ல, தன்கதைகளைக் கூறுதல் என்பது பிறருக்கிரங்கல் மற்றும் ஒருவரையொருவர் விளங்கிக்கொள்ளல் ஆகிய இன்றியமையாத சமூகப் பண்புகளைத் தழைக்கச் செய்கிறது.*

தரம் 2 - 9 | 10 - 30 மணித்துளிகள்

**கருவிகள்:**
முடியுமாயின் உரையாடல் அட்டைகள் (எடுத்துக்காட்டுகளைப் பார்க்கவும்)

**குறிப்புகள்:**

- இங்கு கட்டுப்பாடற்று, தன்னிச்சையாகச் சொல்லப்படும் தனிப்பட்ட வீரதீரச் செயல்கள், பட்டறிவுகள் முதலியனவற்றில் நாம் கண்காணிப்புச் செலுத்தப் போவதில்லை, எப்படியாயினும் இது பள்ளி சூழலில் தமக்கென ஓர் இடம் பெறவேண்டும். இது வழிப்படுத்தப்பட்ட சூழல்களில் இடம்பெறலாம், அவையாவன : கதைசொல்லும் வட்டம் (பார்க்கவும் #17) அல்லது முழுமையாகத் திட்டமிடப்படாதது, ஒரு பிரச்சனை, ஒரு இன்றியமையாத பட்டறிவு அல்லது ஒரு மகிழ்வான நிகழ்வுபற்றிக் கலந்துரையாடவேண்டிய சூழல்.
- எந்தப் பிள்ளையையும் தன்னுடைய தனிப்பட்ட உணர்வுகளை, வீரச்செயல்களை அல்லது பட்டறிவுகளை வெளிப்படுத்தும்படி அழுத்தம் கொடுக்கக்கூடாது. தனிப்பட்ட கதைகள் சொல்லுதலின் இயற்கையான மற்றும் இன்றியமையாத பகுதி என்னவெனில் அதன் தன்னார்வமுடைமையே ஆகும். எனினும், ஒரு பிள்ளை நீண்ட நேரமாக பேசாது அமைதியாக இருக்குமாயின், ஆசிரியர் அதற்கான காரணங்களில் ஈடுபாடு காட்டி அந்நிலைக்குத் தீர்வு காணவேண்டும்.

---

**நடைமுறை:**

- தனிப்பட்ட எண்ணங்கள், பட்டறிவுகள் மற்றும் உணர்வுகள் உள்ளடங்கிய கலந்துரையாடல் சூழல்களுக்கு தொடக்கநிலைத் தூண்டுதலாக, ஆசிரியர் உரையாடல் அட்டைகளைப் பகிர்வார் அல்லது பலகையில் ஒரு வினாவை எழுதுவார், அது பின்னர் கலந்துரையாடப்படும். எடுத்துக்காட்டு:

*நாம் இப்பொழுது வாழும் இடம் பெரிதும் நல்லது என்று என்னால் எண்ண முடியவில்லை*

*நான் அதுபற்றிப் பெருமைப்படுகிறேன்!*

*என் இரு பெரிய விருப்பங்கள் இவைதான்*

*என் குடும்பத்தின் இடத்தை விட இது (நான் இப்போது வாழும் இடம்) மிகவும் நல்லது.*

*எனக்கென பிள்ளைகள் இருக்கும்போது நான் இதை வேறுபட்டதாகச் செய்வேன்.*

- மாணவர்களின் ஒரு எண்ணக்கருவை உரையாடலைத் தொடக்குதற்கான தூண்டுதலாக நன்கு அமையலாம்.
- படங்கள் அல்லது ஒளிப்படங்கள் தனிப்பட்ட உரையாடல்களுக்கான நல்ல தூண்டிகளாகவும் அமையலாம்.
- ஒரு கடித உறையில் எண்ணக்கருக்களைத் (பெயரில்லாதவர்களிடமிருந்தும்) திரட்டி அதனை தனிப்பட்ட உரையாடல் சுற்றுகளுக்கு ஒரு தூண்டியாக அமைப்பதும் ஒரு நல்ல எண்ணக்கருவாகும்.
- கலந்துரையாடல்களுக்கு முன்னர், மாணவர்கள் தங்கள் எண்ணங்களையும் உருக்காட்டல்களையும் திரட்டவும், வரக்கூடிய மொழிச் சிக்கல்களைக் குறித்துக் கொள்ளவும் அவர்களுக்கு சில மணித்துளிகள் வழங்கப்படவேண்டும். பார்க்கவும் #10 (ஓர் உரையாடலுக்கு எவ்வாறு ஏற்பாடு செய்தல்).

III

- ஒரு கலந்துரையாடலுக்கு முன் சிலவேளை சிறிய பயிற்சிச்சுற்று வேண்டப்படலாம். எதற்கெனின்:

  1. மொழி பற்றிய வினாக்களைத் தெளிவாக்குதற்கு (எ.கா. முதல்மொழியில் சொற்கூறுகள்).

  2. மிகவும் பயனுள்ளதான, ஆசிரியரால் பரிந்துரைக்கப்பட்ட வாக்கியக் கட்டுத்தொகுதிகள் அல்லது மொழி வழிகள் என்பவற்றை மீளாய்வு செய்வதற்கு ("என் கருத்தின்படி…", "மாறாக நான் காண்பது…")

  3. இன்றியமையாத உரையாடல் விதிகளை நினைவூட்டுதற்காக, எ.கா. "நான் மிகக் கண்காணிப்புடன் கேட்கிறேன்", "ஒருவரின் கருத்துக்காக எவரும் நகைப்புக்கிடமாகார்", "நான் எவரையும் குறுக்கீடு செய்யமாட்டேன்", முதலியன. (பார்க்கவும் #9).

- வினா பற்றிய கலந்துரையாடல் முதலில் இணையர்களாக அல்லது பெரிய குழுவினை உள்ளடக்கியதாக (குழு நிலையில் அல்லது முழு வகுப்பும்) இடம்பெறும்.

---

# 25 ஆக்கத் திறனுடன் உரைத்தல்

**இலக்கு**

*ஆக்கத்திறனுடன் உரைத்தலில் மொழி, முகபாவம் மற்றும் அபிநயங்கள் என்பன இன்றியமையாதவை. இங்கு மாணவர்கள் தங்களது முதல் மொழியை அன்றாட தேவைகளைத் தாண்டி ஆற்றல் மிக்க வெளிப்பாட்டு முறையைக் கையாளப் பயில்கிறார்கள். ஆகையால் ஆக்கத்திறனுடன் உரைத்தல், எளிமையான உரைத்தலுக்கும், நாடக உரையாடல் முறைகளுக்கும் இடையிலான நடுநிலையைப் பிரதிபலிக்கிறது. (26 – 28 பார்க்கவும்)*


தரம் 2 - 9

20 - 40 மணித்துளிகள்



**கருவிகள்:**
மாணவர்களுக்கான எழுத்துருக்கள் தெரிவு (தேவதைக் கதைகள், நீதிக்கதைகள், கதைகள்…)

**நடைமுறை:**



- ஓர் அறிமுகமாக, ஆசிரியர் ஒரு கதை சொல்கிறார், எ.கா. ஒரு தேவதைக் கதை, புராண அல்லது மாணவர்களின் பாரம்பரிய பண்பாடு இலக்கியத்திலிருந்து ஒரு கதை (மிக நீண்டது அல்ல). ஆசிரியர் #22இல் மதியுரை செய்யப்பட்ட உயிர்ப்புள்ள எடுத்துரைப்புக்கான முன்னூட்டற் குறிப்புகளை உற்றுநோக்கி எழுத்துருவினை தெளிவாகவும் உயிர்ப்பாகவும் உள்ள எடுத்துரைப்பாக ஆக்குதற்கு முயற்சிப்பார்.

- மாணவர்கள் பின்னர் தனியாகவோ சிறு குழுக்களாகவோ அதே முறையில் ஒரு கதையை எடுத்துரைக்க பயிற்சிசெய்ய அறிவுறுத்தப்படுகின்றனர். ஆசிரியர் பொருத்தமான எழுத்துருக்களைப் பகிர்கிறார் (தாழ்தர மாணவர்களுக்குச் சிறியனவும் மிக உயர்தர மாணவர்களுக்கு நீண்டவையும்).

- உயிர்ப்புள்ள தெளிவான உரைக்கான மிக இன்றியமையாத காரணிகளைத் திரட்டி இன்னொரு தடவை மீளாய்வு செய்யப்படும் (பார்க்கவும் #22 இல் முன்னூட்டற் குறிப்புகள்); மாணவர்கள் அவற்றைக் கடைப்பிடிக்க வேண்டும்.

- மாணவர்கள் தங்கள் உரைகளை எடுத்துரைக்க பயிற்சிசெய்கின்றனர் (நடைமுறைகளுக்குப் பார்க்கவும் #22).

- அடுத்து, ஒவ்வொரு உரைகளும் வகுப்பு முழுவதற்கும் எடுத்துரைக்கப்படும்.

- #22 இல் விளக்கப்பட்டபடி, பயிற்சி விமர்சனக் கலந்துரையாடலோடு நிறைவடைகிறது.

---

**மாற்றுவழி:**

- ஆசிரியர் ஒரு கலந்துரையாடலை அறிமுறைப்படுத்தும் ஒரு வழிமுறையாக ஒரு படத்தை அல்லது ஒரு கலைப் பொருளைக் காட்டுகிறார். முழு வகுப்பும் ஒரு கதையை உருவாக்கத் தொடங்குகிறது. இதன்படி ஒரு மாணவர் தொடங்க மற்றவர் கதையை தொடர்கிறார், இப்படித் தொடர்ந்து எல்லோரும் தத்தம் பகுதிகளுக்குப்